தின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 17.07.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 192 பக்கங்கள் : 08




# கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அர்ச்சுனாவின் கருத்தால் பெரும் குழப்பம்!

## அதிகாரிகள் வெளியேறியதால் இடைநடுவில் நிறுத்தம் பொலிஸார் தலையிட்டு அவரை உடனே வெளியேற்றினர்



*கிளிநொச்சி, ஜூலை. 17*

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்த கருத்துக்களால் ஏற்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து, கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திறன் விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இந்தக் கூட்டம், கடற்றொழில் அமைச்சர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தின்போது, திருவையாறு பகுதியில் அமைச்சர் லால் காந்தவால் மேற்கொள்ளப்பட்ட தென்னை செய்கை விநியோகத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

07

# ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கரடி புகுந்து விளையாடியது!

## கடற்தொழில் அமைச்சர் காட்டம்

*கிளிநொச்சி, ஜூலை. 17*

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் மீண்டும் விரைவில் நடைபெறும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சிவபூசையில் கரடி புகுந்தது போல, ஒரு கரடி புகுந்து பைத்தியக்காரத்தனமாக விளையாடி, குழப் பத்தை விளைவித்துக் கூட்டத்தை இடைநிறுத்தியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் கேடு கெட்ட நடவடிக்கைகளுக்கு

07



# பாட அடிப்படையில் விரைவில் 30,000 ஆசிரியர்கள் நியமனம்!

## பொது நிர்வாக அமைச்சர் தகவல்

*கொழும்பு, ஜூலை. 17*

நாட்டில் நிலவும் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, பாரம்பரிய ஆசிரியர் ஆட்சேர்ப்பு முறையிலிருந்து விலகி, பாடசாலைகளில் நிலவும் குறிப்பிட்ட பாட வெற்றிடங்களை இலக்காகக் கொண்டு (பாட அடிப்படையில்) 30,000 ஆசிரியர்களை இந்த ஆண்டுக்குள் அவசரமாக சேவையில் இணைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள்

07

# குறைந்த விலையில் எரிபொருள் பெறமுடியாத நிலை ஏற்படலாம்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்



*கொழும்பு, ஜூலை. 17*

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்த்து, அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றித் தொடர்ந்து வழங்குவதற்காக உலகச் சந்தையில் நிலவும் மிகக் குறைந்த விலைக்கு எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியாமல் போகலாம் என சுகாதார

07

# செம்மணி புதைகுழியில் இன்றும் 6 எலும்புக்கூடுகள் அடையாளம்!

*யாழ்ப்பாணம், ஜூலை. 17*

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துபாத்தி மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்று 34ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாண நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது புதிதாக 06 என்புக்கூடுகள் நேற்று வெளிப்பட்டதாக பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

அதன்படி, நேற்றுடன் 420 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

07

# அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு மேலதிக வரிச் சலுகைகள் சாத்தியம்!



## தூதுவர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

*கொழும்பு, ஜூலை. 17*

அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு வரும் காலத்தில் மேலதிக வரிச் சலுகைகளை எதிர்பார்க்க முடியும் என அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தனது தூதுவர் பதவியில் இருந்து விடைபெறுவதற்கு முன்னதாக, வொஷிங்டன் டிசியில் உள்ள பௌத்த விகாரையில் நேற்று

07

### நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறைகள்

# சீர்திருத்தங்களை விரைவுபடுத்த தூண்டுதலாக அமையவேண்டும்!

## அரசிடம் வலியுறுத்துகிறது தேசிய சமாதான பேரவை

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*கொழும்பு, ஜூலை. 17*

நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறைகள் நீண்ட காலமாக தாமதிக்கப்பட்டு வரும் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதற்கு அரசாங்கத்துக்கு தூண்டுதலாக அமைய வேண்டும் என்று தேசிய சமாதான பேரவை கூறியிருக்கிறது.

இது தொடர்பாக பேரவை வெளியிட்டிருக்கும் ஊடக

07

# எங்களின் காலம் முடிந்துவிட்டது தலைமையேற்க முன்வாருங்கள்!

## இளைஞர்களுக்கு ரணில் அழைப்பு

*கொழும்பு, ஜூலை. 17*

"எமது பரம்பரையில் நாங்கள் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்துவிட்டோம். இனிவரும் காலம் உங்கள் பரம்பரையிடமே உள்ளது. நீங்கள் தலைமையேற்பதற்கு, நாங்கள் இருக்கும் வரை ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும். அவ்வாறு பொறுப்பேற்கக் கூடியவர்கள் முன்வந்தால், அவர்களுக்கு நான் முழுமையான ஆதரவை வழங்குவேன்."

07

# ஐ.தே.க.- ஐ.ம.ச. கூட்டணி; இரு தலைவர்களும் பேச்சு

*கொழும்பு, ஜூலை. 17*

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் , ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையேயான கூட்டணி குறித்து, இரு கட்சிகளினதும் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் நவீன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் பேசிய அவர்,

"ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையேயான கூட்டணி தொடர்பில்,

07

# நாட்டு மக்கள் எப்போதும் அரசுடன்தான் உள்ளனர்!

## அமைச்சர் சுசில் ரணசிங்க கருத்து

*கொழும்பு, ஜூலை. 17*

எதிர்க்கட்சியினர் தங்களது வீடுகளில் ஒன்று கூடிப் பேசினாலும், கிராமங்களில் உள்ள மக்கள் அந்தப் கட்சிகள் போகும் பக்கமெல்லாம் செல்லமாட்டார்கள் என வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு மக்கள் அரசாங்கத்துடன்தான் இருக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர்களை போதை பாவனைக்கு தள்ளும் சமூக ஊடக விளம்பரங்கள்!



## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண

கொழும்பு, ஜூலை. 17

தற்போதைய காலகட்டத்தில் போதைப்பொருள் பாவனையானது ஒட்டுமொத்த சமூகத்தையும் சீரழிக்கும் ஒரு பெரும் புற்று நோயாக உருவெடுத்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் நண்பர்கள் மூலம் போதைக்கு அடிமையாகுவதை விடுத்து இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக பரப்பப்படும் தேவையற்ற விளம்பரங்களும், தவறான வழிகாட்டுதல்களுமே இளைஞர்கள் மத்தியில் போதைப் பழக்கம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அரச தொலைக்காட்சியில் நடைபெற்ற நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கு முன்னைய காலங்களில் நண்பர்கள் மற்றும் தங்கள் வயதிலும் மூத்தவர்கள் மூலமாகவே ஒருவர் போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகி வந்த நிலை மாறி, தற்போது இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக பரப்பப்படும் தேவையற்ற விளம்பரங்களும், தவறான வழிகாட்டுதல்களுமே இளைஞர்கள் மத்தியில் இப்பழக்கம் வேகமாகப் பரவுவதற்கு முதன்மைக் காரணியாக அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் 1979ஆம் ஆண்டளவிலேயே முதன்முதலில் இத்தகைய போதைப்பொருட்கள் ஊடுருவத் தொடங்கின. அக்காலத்தில் சில இயற்கை சார்ந்த போதைப்பொருட்களே பயன்படுத்தப்பட்ட போதிலும், தற்போது இரசாயன முறையில் தயாரிக்கப்படும் அபாயகரமான செயற்கை போதைப்பொருள்களின் புழக்கம் பாரிய அளவில் அதிகரித்துள்ளது.

ஆரம்பத்தில் போதைப்பொருள் பாவிப்பவர் தனது பணத்தைச் செலவழித்துத் தனது உடலையும் உயிரையும் மாத்திரமே கெடுத்துக்கொள்கிறார் என்ற பொதுவான கருத்து நிலவியது. ஆனால், தற்போதைய பொருளாதாரச் சூழலில் செயற்கை போதைப்பொருள்களின் விலை மிக உச்சமடைந்துள்ளது. ஒரு நாளைக்கு இருமுறை போதைப்பொருள் பயன்படுத்தும் ஒருவருக்குச் சராசரியாக 8,000 ரூபா வரை செலவாகிறது.

இதன் அடிப்படையில் கணக்கிட்டால், ஒரு மாதத்திற்குப் போதைப்பொருளுக்கு மாத்திரம் சுமார் ரூ240,000 அதிகமான தொகை தேவைப்படுகிறது. ஒரு சாதாரண குடிமகனின் மாதாந்தச் சம்பளத்தை விடவும் இது மிக அதிகம் என்பதால், இந்தப் பணத்தைத் திரட்டுவதற்காகப் போதைப்பொருள் பாவனையாளர்கள் வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்தல், பெண்களின் நகைகளை திருடல், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களின் பாகங்களை திருடுதல் போன்ற பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இதைத் தவிர, போதைப்பொருள் பாவனையால் குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருவதுடன், தங்களின் சொந்தப் பெற்றோரையும் உறவினர்களையும் கொலை செய்யும் மிக கொடூரமான கலாசாரம் சமூகத்தில் ஊடுருவியுள்ளது-என்றார். (அ)

# மக்கள் போராட்டங்களை அலட்சியம் செய்யாதீர்கள்!

## அரசிடம் திலித் ஜயவீர கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 17

அரசாங்கம் கூறுவது போல எதிர்க்கட்சி பலவீனமாக இருந்தாலும் மக்கள் மத்தியில் இருந்து எழும் போராட்டங்களை அரசாங்கம் சாதாரணமாக எடை போடக் கூடாது விவசாயிகளையும் நாட்டின் சட்டக் கட்டமைப்பில் உள்ள நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளையும் பகைத்துக்கொண்டு இந்த அரசாங்கத்துக்கு ஒருபோதும் நீண்ட தூரம் பயணிக்க முடியாது என சர்வஜன அதிகாரம் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள கட்சியின் தலைமை காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் விவசாயத் துறைக்கு தர்க்கரீதியான மற்றும் விஞ்ஞானபூர்வமான புதிய அணுகுமுறை அவசியமாகும். தற்பொழுது பயிர் உற்பத்திக்கான உள்ளீடுகளின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதால் விவசாயிகளுக்கு தொடர்ந்து நட்டமே ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் என்ன செய்வதென்று அறியாது திகைத்துப் போயுள்ளனர்.

இப்போது நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டங்கள் வெடித்துள்ளன. ஆனால் அரசாங்கம் வழமை போல் எதிர்க்கட்சியினர்தான் இவற்றைத் தூண்டிவிடுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகின்றது. உண்மையில் தற்போதைய எதிர்க்கட்சி மிகவும் பலவீனமாகவே உள்ளது. அந்தப் பலவீனம் எனக்கும் பொருந்தும்.

ஆனால், எதிர்க்கட்சி பலவீனமாக இருக்கும் ஒரு சூழ்நிலையிலும் கூட, இவ்வளவு பெரிய மக்கள் எதிர்ப்பு அடிமட்ட மக்களிடமிருந்து எழுவதை அரசாங்கம் சாதாரணமாக எடை போடக் கூடாது. எனவே, இந்த விவசாயிகள் படும் வேதனையை வெறுமனே எதிர்க்கட்சிகள் நடத்தும் போராட்டங்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தாமல், இதன் பின்னாலுள்ள யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளுமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

(அ)

# 8 வயது சிறுவன் கார் எரித்ததாக பரவி வரும் தகவல் ஆதாரமற்றது!

கொழும்பு, ஜூலை. 17

குருநாகலில் உள்ள பாடசாலை ஒன்றின் வளாகத்தில் சொகுசு கார் ஒன்று தீப்பற்றி எரிந்த சம்பவம் தொடர்பாக, 8 வயதுச் சிறுவன் ஒருவன் காரைக் கொளுத்தியதாகச் சமூக ஊடகங்களில் பரவி வரும் வீடியோ ஆதாரமற்றது என பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவின் வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வ அறிக்கையில்,

கடந்த ஜூலை 3 ஆம் திகதி குருநாகல் பகுதியில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றின் வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 1.4 கோடி ரூபா பெறுமதியான கார் ஒன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்து சேதமடைந்தது.

அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் 8 வயதுச் சிறுவனே இந்தத் தீ வைப்புக்குக் காரணம் என குருநாகல் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று அளிக்கப்பட்டதை அடுத்து, இது குறித்துப் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தனர்.

சமூக ஊடகங்களில் வைரலாகி வரும் காணொளியில் இருக்கும் சிறுவன், அதே பாடசாலையில் கல்வி கற்கும் 8 வயது மாணவன் என்பதும், விபத்து நடந்த நேரத்தில் அவன் அந்த காரின் அருகே நடந்து சென்று கொண்டிருந்தான் என்பதும் உண்மைதான் எனப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனினும், அந்தச் சிறுவன் காரைத் தீயிட்டுக் கொளுத்தினான் என்பதற்கான எந்தவொரு நேரடிச் சாட்சியங்களோ அல்லது தடய அறிவியல் ஆதாரங்களோ இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விவரங்கள் ஏற்கனவே நீதிமன்றத்தில் அறிக்கை செய்யப்பட்டுள்ளன. கார் தீப்பற்றியதற்கான உண்மையான காரணத்தைக் கண்டறியும் நோக்கில், அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரின் நிபுணத்துவ ஆய்வுகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன், குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சாவகச்சேரி நகரசபை காணியில் ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்பாட்டில்!

யாழ்ப்பாணம், ஜூலை. 17

தென்மராட்சியில் சாவகச்சேரி நகரசபைக்கு சொந்தமான காணியில் கொட்டப்பட்டிருந்த குப்பைக் கழிவுகளில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குப்பைக் கழிவுகளில் ஏற்பட்ட தீ வேகமாகப் பரவத் தொடங்கியதையடுத்து, அப்பகுதியில் புகை மூட்டம் ஏற்பட்டதுடன் சுற்றுப்புற மக்களிடையே அச்சமும் நிலவியது.

இதையடுத்து உடனடியாக தீயணைப்புப் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் மூலம் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ விபத்திற்கான காரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ)



# விவசாயிகளின் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை!

## பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க

கொழும்பு, ஜூலை. 17

இலங்கை விவசாய சமூகம் தற்போது எதிர்நோக்கியுள்ள கடுமையான நெருக்கடிகளுக்கு தற்காலிக தீர்வுகளை வழங்காமல், ஒரு வலுவான தேசிய கொள்கையின் ஊடாக விவசாயத் துறையில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 1980களின் பின்னர் இலங்கையின் விவசாயத் துறை வீழ்ச்சிப் பாதையிலேயே பயணித்து வந்துள்ளது. தரமான விதை நெல் தட்டுப்பாடு, குளங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகள் முறையாகப் பராமரிக்கப்படாமை, பாரம்பரிய இயற்கை விவசாயத்திலிருந்து இரசாயன உரப் பயன்பாட்டுக்கு விவசாயிகள் பழக்கப்படுத்தப்பட்டமை மற்றும் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட விவசாய நிலங்களால் உற்பத்திச் செலவு அதிகரித்தமை போன்ற பல்வேறு காரணிகளே இந்த வீழ்ச்சிக்கு வழி வகுத்துள்ளன.

அத்துடன், விவசாயத்துறையின் கூட்டுறவுப் பொறிமுறை நீண்ட காலமாகச் செயலிழந்து காணப்பட்டதும், விவசாயத் துறையின் பெறுமதி சங்கிலி, இடைத்தரகர்கள் மற்றும் சில பெரும் வர்த்தகர்களின் ஏகபோக ஆதிக்கம் நிலவியதும் இந்தத் துறையின் ஒரு பிரதான பலவீனமாகும்.

இந்த நிலைமைகளை மாற்றி, அமெரிக்கா, தென்கொரியா, இந்தியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் காணப்படும் வெற்றிகரமான கூட்டுறவு முறைகளைப் பின்பற்றி, நவீன தொழில்நுட்பங்களையும் கூட்டுறவு முறைகளையும் ஒருங்கிணைத்த ஒரு புதிய வேலைத்திட்டத்தை அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்றது. அண்மையில் ஏற்பட்ட டித்வா சூறாவளி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றுக்காக இதுவரை வழங்கப்பட்ட 4,000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாய் வரை இழப்பீட்டுத் தொகையை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

மேலும், மூடப்பட்டுக் கிடந்த நெல் களஞ்சியசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு, நெல் கொள்வனவுக்காக 16 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் நெல்லை சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக நேரடியாகச் சந்தைப்படுத்துவதன் மூலம், இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, விவசாயிகளின் அனைத்துப் பிரச்னைகளையும் ஒரே வருடத்திற்குள் தீர்த்துவிட முடியாது என்றாலும், அடுத்த மூன்று வருடங்களுக்குள் நாட்டின் விவசாய நிலங்களை இயற்கை விவசாயத்திற்கு ஏற்றதாக மாற்றி, குளங்களைப் புனரமைப்பதன் மூலம் சர்வதேச அளவில் இலங்கை விவசாயத்திற்குப் பெரும் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்க முடியும்-என்றார். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

17.07.2026 வெள்ளிக்கிழமை

பராபவ வருடம், ஆடி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மத்திய கிழக்கு போரால் மீண்டும் எரிபொருள் நெருக்கடி

உலக அரசியலிலும் பொருளாதாரத்திலும் மிக முக்கியமான பிராந்தியமாகக் கருதப்படுவது மத்திய கிழக்காகும். உலகின் கச்சா எண்ணெய் வளங்களில் பெரும்பகுதியைக் கொண்டுள்ள இந்தப் பகுதி, சர்வதேச எரிசக்திச் சந்தையின் இதயமாக விளங்குகிறது. எனவே, அங்கு ஏற்படும் ஒவ்வொரு அரசியல் பதற்றமும், ஆயுத மோதலும் அல்லது போரும் உலகம் முழுவதும் உடனடியாக பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

தற்போது மீண்டும் தீவிரமடைந்துள்ள மத்திய கிழக்கு மோதல்கள், உலகளாவிய எரிபொருள் விநியோகம் மற்றும் விலைகள் குறித்து புதிய அச்சத்தை உருவாக்கியுள்ளன.

எண்ணெய் உற்பத்தி நாடுகளின் பாதுகாப்பு, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாடு, கப்பல் போக்குவரத்து பாதைகள் மற்றும் குறிப்பாக ஹோர்முஸ் நீரிணை போன்ற முக்கிய கடல்வழிகள் பாதிக்கப்படும் அபாயம் எழும்போதெல்லாம், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை வேகமாக உயர்கிறது. இந்த விலை உயர்வு வெறும் எண்ணெய் இறக்குமதி செலவை மட்டும் அதிகரிப்பதில்லை உலகளாவிய பணவீக்கத்தையும் தூண்டுகிறது. இதன் தாக்கம் வளர்ந்து வரும் நாடுகளில் மிகவும் தீவிரமாக உணரப்படுகிறது.

இலங்கை போன்ற எரிபொருள் இறக்குமதியை முழுமையாக நம்பியுள்ள நாடுகளுக்கு இந்நிலைமை மிகப் பெரிய சவாலாகும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது, எரிபொருள் பற்றாக்குறையால் நாடு சந்தித்த அவலங்களை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. பல கிலோமீட்டர் நீளமான எரிபொருள் வரிசைகள், பல நாட்கள் நீடித்த காத்திருப்பு, பொதுப் போக்குவரத்து முடக்கம், மின்சாரத் தடை, தொழிற்சாலைகளின் உற்பத்தி பாதிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு என முழு நாட்டின் பொருளாதாரமும் சமூக வாழ்க்கையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அந்த அனுபவம் மீண்டும் ஏற்படக்கூடாது என்பதே அனைவரின் விருப்பமாகும்.

இன்று நாட்டின் பொருளாதாரம் ஓரளவு மீட்சிப் பாதையில் பயணித்தாலும், அது இன்னும் உறுதியான நிலையில் இல்லை. அந்நியச் செலாவணி கையிருப்பை வலுப்படுத்தும் முயற்சிகள் தொடர்கின்றன. இத்தகைய சூழலில், உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை திடீரென உயர்ந்தால், எரிபொருள் இறக்குமதிக்கான செலவு பெருமளவில் அதிகரிக்கும். அதன் விளைவாக உள்நாட்டில் எரிபொருள் விலை உயர வாய்ப்புள்ளது. அதனைத் தொடர்ந்து போக்குவரத்துக் கட்டணங்கள், மின்சார உற்பத்திச் செலவு, விவசாய உற்பத்தி, தொழில்துறை செலவுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அனைத்தும் உயரக்கூடும். இறுதியில் இந்தச் சுமை சாதாரண மக்களின் தோள்களிலேயே விழும்.

இந்நிலையில் அரசு முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியது மிகவும் அவசியம். போதுமான அளவு எரிபொருள் கையிருப்பை உறுதிப்படுத்துதல், நீண்டகால இறக்குமதி ஒப்பந்தங்களைப் பரிசீலித்தல், பல்வேறு நாடுகளிலிருந்து எரிபொருள் கொள்வனவை விரிவுபடுத்துதல், தேவையான நிதி ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்தல் போன்ற நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதேவேளை, எரிபொருள் விநியோகத்தில் எந்தவித இடையூறும் ஏற்படாது என்பதற்கான தெளிவான தகவல்களை மக்களுக்கு தொடர்ந்து வழங்குவதும் அரசின் பொறுப்பாகும். தகவல் பற்றாக்குறை மற்றும் வதந்திகளே பல நேரங்களில் தேவையற்ற பதற்றத்தையும் பதுக்கலையும் உருவாக்குகின்றன.

இந்த நெருக்கடி இலங்கைக்கு இன்னொரு முக்கியமான பாடத்தையும் நினைவூட்டுகிறது. உலக அரசியல் மாற்றங்களுக்கு அடிக்கடி பாதிக்கப்படும் எரிபொருள் இறக்குமதியை மட்டுமே நம்பிய பொருளாதார அமைப்பு நீண்ட காலத்திற்கு நிலையானதாக இருக்க முடியாது. சூரிய ஆற்றல், காற்றாலை மின்சாரம், உயிரிசை எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களில் அதிக முதலீடு செய்வதும், பொதுப் போக்குவரத்தை மேலும் வலுப்படுத்துவதும், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதும், எரிசக்தி சிக்கனக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் இனி காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

## சிறைச்சாலைக் கலவரங்களும் அரசியலும்;

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மிகப்பெரிய சவாலும் இலங்கையின் மிகப்பெரிய வாய்ப்பும்

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இரண்டு நாட்களாக (ஜூலை 5 மற்றும் 6 ஆம் திகதிகளில்) வெடித்த கலவரங்கள், திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் நிதியாளர்களுக்கு எதிராகப் போராடுவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்கொள்ளும் சவாலின் அளவை உணர்த்தும் ஒரு கவலையளிக்கும் அறிகுறியாகும். இதன் அரசியல் விளைவுகளை எதிர்பார்க்கக் கூடியதாகவே உள்ளன.

அரசாங்கத்தின் சார்பில், நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பொறுப் பேற்றுக்கொண்டு, நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு நேரில் சென்று, அதிகாரிகளுடன் பலமுறை கலந்துரையாடி, கலவரம் நடந்து இரண்டு நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் விரிவான அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளார். பிரதான எதிர்க்கட்சி பொறுப்பற்றதாக நடந்து கொள்கிறது.

ராஜபக்சாக்களின் முன்னாள் நீதியமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தற்போதைய அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். எதற்காக? ஒரு அரசியல்வாதியாகவும் கபினெட் அமைச்சராகவும் பீரிஸ் கொண்டிருந்த பரிதாபகரமான வரலாற்றைக் கருத்தில் கொள்ளும் போது, எவரினதும் இராஜினாமாவைக் கோரும் தகுதி அவருக்கு இல்லை. ஒட்டுமொத்த அரசாங்கமும் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளும் கூட எழுந்துள்ளன.

ஆனால், இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. நீர்கொழும்பு சிறைச்சாலையில் நடந்த இந்தக் கலவரங்களைக்கூட, வெடிக்கக் காத்திருந்த ஒரு கால வெடிகுண்டின் எதிர்பாராத வெடிப்பாகவே பார்க்க முடியும் - இது போதைப்பொருள் பொருளாதாரம், திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் நெரிசல்மிக்க, போதிய கண்காணிப்பற்ற சிறைச்சாலைகள் ஆகியவற்றின் கொடூரமான முக்கோணக் கூட்டணியாகும்.

நாட்டின் 26 சிறைச்சாலைகளில் மொத்தம் சுமார் 10,000 கைதிகளை மட்டுமே தங்கவைக்க முடியும் என்ற நிலையில், தற்போது 40,000 க்கும் அதிகமான கைதிகள் உள்ளனர். கலவரம் நடந்த நேரத்தில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2,600 கைதிகள் இருந்தனர். இது 650 கைதிகளைத் தங்கவைக்கும் சிறையின் கொள்ளளவை விட மிக அதிகமாகும். இக்கலவரத்தில் 700 க்கும் மேற்பட்ட கைதிகள் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெரிசல்மிக்கதும் வசதிகள் குறைந்ததுமான சிறைச்சாலைகள் கொடுமைப்படுத்துதல், ரவுடித்தனம் மற்றும் வன்முறைகளுக்கு இயற்கையான வளர்ப்பு நிலங்களாகும். வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள விளக்கமறியல் கைதிகளையும், தண்டனை பெற்ற குற்றவாளிகளையும் ஒன்றாக அடைப்பது, தண்டனை பெற்றவர்கள் விளக்கமறியல் கைதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எப்போதும் தயாராக இருக்கும் ஒரு சூழ்நிலையை மேலும் மோசமாக்குகிறது.

இந்த பலவீனங்கள் போதைப்பொருள் உலகின் குற்றவாளிகளாலும், சிறைக்கைதிகள் மத்தியில் உள்ள அவர்களின் பிரதிநிதிகளாலும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. நீர்கொழும்பு சிறைச்சாலையில் நிலைமை கொதிநிலையை அடைந்தபோது, இந்த அனைத்து காரணிகளும் ஒன்றாக இணைந்தன. இதனால் ஏழு அதிகாரிகள் மற்றும் 20 கைதிகள் கொல்லப்பட்டதுடன், 100 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சிறைக்கு வெளியே இருக்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களிடமிருந்து சிறைக்குள் இருக்கும் கைதிகளுக்குத் தகவல்களைத் பரிமாறி, போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக இருப்பவர்கள் என்றும் சிறை அதிகாரிகளுக்குத் தகவல் வழங்குபவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் என்றும் அடையாளம் காணப்படும் கைதிகள் மீது தாக்குதல் நடத்துமாறு கட்டளையிட்ட ஒரு சூத்திரதாரியும் சிறைக்குள் இருந்தான்.

நீதியமைச்சர் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம், சிறையின் பாதுகாப்பு உள்கட்டமைப்பைச் சீர்குலைப்பதே ஒரு குழுவினர் செய்த வேலை.

இதன் பின்னணியில் கைதிகளின் ஒழுங்கமைக்கப்பட்ட குழு ஒன்று இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். அவர்கள் கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்களை உடைத்து, "போதைப்பொருள் மற்றும் ஏனைய சட்டவிரோதப் பொருட்கள் சிறைக்குள் நுழைவதைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளை முடக்கும்" முயற்சியின் ஒரு பகுதியாக ஒரு உடல் ஸ்கேனரையும் அழித்துள்ளனர். தனது அறிக்கையில், நாணயக்கார அவர்கள், நெரிசலைக் குறைப்பதற்கும் கண்காணிப்புத் திறனை விரிவுபடுத்துவதற்கும் அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை அறிவித்தார்.

இதில் பிணைத் தேவைகளை எளிமையாக்குதல் மற்றும் பிணை விசாரணைகளை விரைவுபடுத்துதல், அத்துடன் அனைவரையும் விளக்கமறியலில் வைப்பதற்கு மாற்றாக மின்னணு கண்காணிப்புடன் கூடிய "வீட்டுக் காவல்" முறையை அறிமுகப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

### தேசிய மக்கள் சக்தியின் தனித்துவம்

இலங்கை சிறைக் கலவரங்களின் சோகமான வரலாற்றைக் கொண்டுள்ளது - 1983 வெலிக்கடை சிறையில் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டமை, அதே சிறையில் 2012ஆம் ஆண்டில் பாதுகாப்புப் படையினரால் நடத்தப்பட்ட முற்றிலும் மாறுபட்ட கலவரம் மற்றும் அதன் கொடூரமான ஒடுக்குமுறை, 2020ஆம் ஆண்டில் மஹர சிறைச்சாலை மோதல்கள் ஆகியவை இதில் அடங்கும். போதைப்பொருள், குற்றம் மற்றும் சிறைச்சாலைகள் ஆகியவற்றின் இந்த கொடூரமான முக்கோணக் கூட்டணி ஒப்பீட்டளவில் ஒரு புதிய நிகழ்வு ஆகும். அந்த முக்கோணத்தை உடைக்க, போதைப்பொருள் கடத்தலை இலக்கு வைத்தல், வன்முறைக் குற்றங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் சிறைச்சாலை சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் ஆகிய மூன்று முனைகளிலும் ஒரே நேரத்தில் அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை தேவைப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் ஒரு பெரிய பணியாகும், இதற்கு தொடர்ச்சியான ஒருங்கிணைந்த முயற்சியுடன் பெரும் வளங்களும் தேவைப்படும்.

அதே நேரத்தில், தற்போதைய சூழ்நிலையில் அரசியல் ரீதியாக தனித்துவமான - ஊக்கமளிக்கும் சில விடயங்களை நான் காண்கிறேன். முதன்முறையாக, வங்கி மற்றும் வணிக உலகை அரசியலுடன் இணைக்கும் வெளிநாட்டு மோசடிகள், பணமோசடி மற்றும் இலஞ்சப் பரிவர்த்தனைகள் போன்ற நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டு, குற்றங்கள் மற்றும் போதைப் பொருள் உலகம் நேரடியாக அரசியலுடன் தொடர்புகொண்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தலுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அல்லது தண்டனை பெற்ற கைதிகளுடன் 92 முறை தொலைபேசியில் பேசிய ஒரு குறிப்பிட்ட அரசியல்வாதி பற்றி ஜனாதிபதி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த அழைப்புகளில் 54 அழைப்புகள் அந்த அரசியல்வாதியால் மேற்கொள்ளப்பட்டவை, 38 அழைப்புகள் சிறையிலிருந்த கைதிகளால் அவரிடம் பெறப்பட்டவை.

இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள தங்களது உறுப்பினர்களுக்கு எதிராக அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அல்லது எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கிறது என்பதை பாராளுமன்றத்திற்கும் நாட்டுக்கும் அரசியல் கட்சிகள் அறிவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி சவால் விடுத்தார். உண்மையில் எனது கருத்து என்னவென்றால், இந்த வாரம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தான் இலங்கைக்கு போதைப்பொருள் பொருளாதாரம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்கு மிகச் சிறந்த மற்றும் தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறதுஎன்பதாகும்.

**(மிகுதி நாளைய இதழில்)**

**- ராஜன் பிலிப்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 17 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - ஆடி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சூன்ய



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் வேலைகள் விரைந்து முடியும். நன்மை கிட்டும்.

**இடபம்**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நல்லன நடக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். விழிப்புடன்செயல்பட வேண்டும்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்து போங்கள். நிதானம் தேவைப்படும்.

**கன்னி**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்க ளுக்கு முன்னுரிமை தருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**மகரம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் ராஜ தந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். வெற்றி பெறும் நாள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நன்மை நடக்கும் நாள்.

# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு தொடர்பில் பிரதி அமைச்சர் தலைமையில் ஆராய்வு

வவுனியா, ஜூலை. 17

வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஒழிப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் குறித்த கலந்துரையாடலொன்று, கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

தற்போது வவுனியா மாவட்டத்தில் 67 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், வவுனியா நகரத்தை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு நோய் வேகமாக பரவி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

முறையற்ற கழிவகற்றல், நீர் தேங்கி காணப்படல் மற்றும் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்ற வாழ்விடங்கள் நகரத்தில் காணப்படுகின்றமை போன்ற காரணங்களால் வவுனியா மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளதாக இக்கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கமைய அரச நிறுவனங்கள், பாடசாலைகள், மத ஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களை உள்ளடக்கும் வகையில் பல்வேறு டெங்கு ஒழிப்பு



மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா தெற்கு, வெண்கலசெட்டிகுளம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் டெங்கு நோய் பரவலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் சுட்டிக்காட்டினர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் நா.கமலதாசன் ஆகியோர் உட்பட முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ)

## பொதுமக்களின் காணிகளை அடையாளப்படுத்தி முன்னேற்றகரமான செயற்பாடுகள் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஜூலை. 17

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் உள்ள பொதுமக்களின் காணிகளை உரிய அமைச்சுக்கு பரிந்துரை செய்யும் உபகுழு நேற்று முன்தினம் கூடி கலந்துரையாடியுள்ளது.

மாவட்ட மட்டத்தில் வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் உள்ள பொதுமக்களின் காணிகளை அடையாளப்படுத்தி தொடர்ச்சியான அதன் முன்னேற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக மாவட்ட மட்டத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உப குழு அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட உப குழு கூடியது.

இதன்போது குறித்த காணிகளின் தற்போதைய நிலை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் பரிந்துரைகளை உரிய அமைச்சுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த உபகுழுவில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் காணி அஜிதா பிரதீபன், வனவள மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், மாவட்ட மட்ட காணி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## முல்லைத்தீவில் நெல் கொள்வனவு ஆரம்பம்!

முல்லைத்தீவு, ஜூலை. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கை முள்ளியவளை கமநல சேவை நிலைய நெல் களஞ்சியசாலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் நிர்ணய விலையில் நெல்லைக் கொள்வனவு செய்து வருகின்றது.

அந்த வகையில் சிவப்பு நாடு 120 ரூபாய்க்கும், வெள்ளை நாடு 120 ரூபாய்க்கும், சம்பா 130 ரூபாய்க்கும், கீரிச்சம்பா 140 ரூபாய்க்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

ஒரு விவசாயியிடம் இருந்து 2500 ரூபாய்க்கு நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் நெல் களஞ்சியசாலையிலும், முறிப்பு நெல் களஞ்சிய சாலையிலும் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2800 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (அ)

## அஸ்வெசும பயனாளிக்கு புதிய வீடு

யாழ்ப்பாணம், ஜூலை. 17

யாழ்ப்பாணம் தென்மராட்சி, மீசாலை கிழக்கு கிராமசேவையாளர் பிரிவில், வீடற்ற அஸ்வெசும பயனாளி ஒருவருக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடு நேற்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

வீடற்ற மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு பாதுகாப்பான, நிலையான மற்றும் தரமான குடியிருப்புகளை வழங்கும் நோக்கில் அரசின் வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நிர்மாணிக்கப்பட்ட இந்த வீடு, உரிய பயனாளிக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதுடன், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசிய கபடி போட்டியில் முதலிடம் பிடித்த யாழ்ப்பாண மகளிர் அணிக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 17

தேசிய கபடி போட்டியில் முதலிடம் பிடித்த யாழ்ப்பாண மகளிர் அணியை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக, தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட போட்டியில் யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியில் கலந்து கொண்ட மகளிர் கபடி அணி தேசிய ரீதியில் முதலிடத்தை பெற்றது.

முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தி 26 மாவட்டங்கள் பங்கு பற்றிய குறித்த



போட்டியில் யாழ்ப்பாண மகளிர் கபடி அணி முதல் இடத்தை பெற்றது.

இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய மகளிர் கபடி அணியுடன் போட்டியில் மோதியதன் அடிப்படையில் வடமாகாணத்தை சேர்ந்த இரு அணிகள் இறுதி போட்டியில் விளையாடியமை விசேட அம்சமாகும்.

குறித்த போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகள் யாழ்ப்பாண மாவட்ட செயலக பிரதான நுழைவாயிலில் இருந்து மாலை அணிவித்து வரவேற்றதுடன் வெற்றி ஈட்டிய வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிச்சயமற்ற தரக் கட்டுப்பாட்டு முறையினால் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை. 17

இலங்கையின் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினூடாக அமுல்படுத்தப்படும் மட்டற்ற நிர்வாகத் தாமதங்கள் மற்றும் நிச்சயமற்ற தரக் கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் காரணமாக, சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற மருந்து உற்பத்தி நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய முற்றிலும் மறுத்து வருவதாகவும், இதனால் எதிர்காலத்தில் நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் எழுந்துள்ளதாகவும் இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருக்கு இலங்கை மருத்துவ சங்கத்தின் விசேட நிபுணர் குழு உறுப்பினர் கலாநிதி சஞ்சய் பெரேராவினால் உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்டுள்ள அவசரக் கடிதத்தில், இலங்கையின் இத்தகைய சீரற்ற கொள்கை மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற முதலீட்டுச் சூழல் காரணமாக, சர்வதேச நிறுவனங்கள் இலங்கையைப் புறக்கணித்துவிட்டு தான் சானியா போன்ற ஆபிரிக்க நாடுகளை நோக்கித் தங்களின் பில்லியன் கணக்கான முதலீடுகளை நகர்த்தி வருவதாகக் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மருந்துப் பொருள்களின் விலைகளை ஆண்டுதோறும் மீள நிர்ணயம் செய்யும் புதிய வழமை மற்றும் அனுமதிப்பத்திரப் புதுப்பித்தல் தாமதங்கள் காரணமாக, தற்பொழுது மாதாந்தம் சுமார் நூறு மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத மற்றும் போலியான மருந்துகள் பயணிகளின் பொதிகள் ஊடாக எவ்வித சுங்கச் சோதனை களுமின்றி நாட்டுக்குள் கள்ளத் தனமாகக் கடத்தப்பட்டு வருவ தாகவும் அக் கடிதத்தில் அம்பலப்படுத் தப்பட்டுள்ளது. (அ)

# காளான் விவசாயிகளுக்கு புதிதாக காப்பீட்டுத் திட்டம்

கொழும்பு, ஜுலை. 17

விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கும் விவசாய மற்றும் கமநல காப்பீட்டு சபை, காளான் செய்கையாளர்களுக்காகப் புதிய காப்பீட்டுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

காளான் செய்கையை ஊக்குவிப்பதையும், எதிர்பாராத பயிர்ச் சேதங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்குப் பாதுகாப்பை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

அதன்படி, 250 வளர்ப்புப் பைகளை கொண்ட ஒரு காளான் வளர்ப்பு அறையை, மூன்று மாத காலப்பகுதிக்கு சுமார் 2,025 ரூபாய் பிரீமியத்தைச் செலுத்தி காப்பீடு செய்ய முடியும்.

நோய்த்தாக்கங்கள் அல்லது பூச்சிகளின் தாக்கங்களால் காளான் செய்கைக்குச் சேதம் ஏற்பட்டால், ஒரு தொகுதிக்கு 22,500 ரூபாய் வரை நட்டஈடாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமையக் காளான் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மாத்திரமே இந்தக் காப்பீட்டுத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்கள்.

காளான் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், விவசாய மற்றும் கமநல காப்பீட்டுச் சபையினால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# பொலித்தீன் பைகள் மீதான கட்டணத்தை முறையாக நடைமுறைப்படுத்தவேண்டும்!

## சூழலியல் நடவடிக்கை வலையமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜுலை. 17

இலங்கையில் பொலித்தீன் பைகள் மீதான கட்டணத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யுமாறு, மத்திய சுற்றாடல் அதிகார சபையை இலங்கை சூழலியல் நடவடிக்கை வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பல்பொருள் அங்காடிகள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் சிறு வணிகங்கள் மத்தியில் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் முரண்பாடுகள், குறித்த கொள்கையின் நோக்கத்தையே பாதிப்பதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பொலித்தீன் பயன்பாட்டைக் குறைப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொலித்தீன் பை கட்டண முறையை வரவேற்கும் அதேவேளை, பல வணிக நிறுவனங்கள் இதுவரை இலவசமாகவே பொலித்தீன் பைகளை வழங்குவதாக அல்லது சீரற்ற முறையில் கட்டணத்தை அறவிடுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கொள்கையை முறையாக நடைமுறைப்படுத்தாத வணிக நிறுவனங்கள் மீது, மத்திய சுற்றாடல் அதிகார சபை தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொலித்தீன் பைகளுக்கான கட்டணத்தின் சுற்றுச்சூழல் நன்மைகள் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். மேலும், துணிப் பைகள் மற்றும் மக்கும் தன்மையுடைய பைகள் போன்ற சூழல் நட்பு மாற்றுகளைப் பயன்படுத்த ஊக்குவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# அடையாள அட்டை இல்லாதவர்களுக்கும் ஓ.எல். பரீட்சைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

கொழும்பு, ஜுலை. 17

2026ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், தேசிய அடையாள அட்டையை இதுவரை பெற்றிருக்காவிட்டாலும், எதிர்வரும் ஜுலை 23ஆம் திகதிக்கு முன்னர் எவ்விதத் தடையுமின்றி இணையவழியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை வெளியிடப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையில், ஜுலை 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பப் பதிவு, திட்டமிட்டபடி ஜுலை 23ஆம் திகதியுடன் நிறைவடையும் என்றும், அதற்குப் பின்னர் கால அவகாசம் நீடிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இன்னும் கிடைக்காத பாடசாலை மாணவர்கள், அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் எனவும், தனியார் விண்ணப்பதாரர்கள் தங்களது பெற்றோர் அல்லது உத்தியோகபூர்வப் பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி இணையவழியில் பதிவு செய்யலாம் எனவும் பரீட்சைத் திணைக்களம் விளக்கியுள்ளது.

தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தால் தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கும் வாய்ப்பை இழக்க வேண்டியதில்லை என வலியுறுத்தியுள்ள பரீட்சைத் திணைக்களம், மேலதிக தகவல்களுக்கு 1911 என்ற அவசர இலக்கத்தையோ அல்லது 011 2784537 என்ற உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கத்தையோ தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. (அ)

# புகையிலை அடங்கிய வெற்றிலை விற்பனைக்கு மிகவிரைவில் தடை!



கொழும்பு, ஜுலை. 17

இலங்கையில் அதிகரித்து வரும் வாய் புற்றுநோய் பாதிப்புகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புகையிலை கலந்த வெற்றிலையை விற்பனை செய்வதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் பதிவாகும் புற்றுநோய் வகைகளில் வாய் புற்றுநோய் முன்னணியில் உள்ள நிலையில், இதனைத் தடுக்கும் முயற்சியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொருளாளர் எம்.ஏ.சி.பிரசாத் தெரிவித்துள்ளார்.

புகையிலை கலந்த வெற்றிலையைப் பயன்படுத்துவது வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய சட்டங்களின்படி, புகையிலை கலந்த வெற்றிலையை விற்பனை செய்தல், விநியோகித்தல், தம்வசம் வைத்திருத்தல் அல்லது விற்பனைக்காகக் காட்சிப்படுத்துதல் ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், பொது மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கும் நாடளாவிய ரீதியில் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

எனவே, பொதுமக்களும் வர்த்தகர்களும் இந்த விடயம் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும், சட்ட விரோதமான முறையில் புகையிலையை வெற்றிலையுடன் கலந்து விற்பனை செய்வதைத் தவிர்க்குமாறும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# கட்டுநாயக்கவில் பொலிஸ் அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பியவர் கைது!

கொழும்பு, ஜுலை. 17

கட்டுநாயக்க, தெவமொட்டாவ பகுதியில் பொலிஸ் அதிகாரியொருவரை துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்திவிட்டு, தப்பிச் சென்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க, தெவமொட்டாவ பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் சந்தேகநபர்கள் இருவரை கைது செய்ய முற்பட்டபோது, அவர்களில் ஒருவர் பொலிஸ் அதிகாரியொருவரின் துப்பாக்கியை அபகரித்துள்ளார்.

பின்னர், அதன் மூலம், அங்கிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர், துப்பாக்கியுடன் அங்கிருந்து தப்பியோடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தப்பியோடிய சந்தேகநபர் நேற்று முன்தினம் மாலை திவுலப்பிட்டிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், குறித்த சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. (அ)

# கணக்கு இலக்கங்களை மாற்றுவதில் மோசடியா?

## நிதிக் குழுவில் பரபரப்பான விவாதம்

கொழும்பு, ஜுலை. 17

அமெரிக்காவிலிருந்து வியட்நாமுக்கு கணக்கு இலக்கங்களை மாற்றுமாறு கோரப்படும்போது பின்பற்றவேண்டிய வழிகாட்டுதல்கள் மற்றும் காப்பீட்டு நடைமுறைகள் குறித்து நிதிக் குழு முன்னிலையில் முக்கிய அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களுக்கு அமையவே கணக்குகள் புதுப்பிக்கப்படுவதாகவும், இதற்காக இரு வேறு நிலைகளில் சரிபார்ப்பு மற்றும் அங்கீகார நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர். 2025 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இதற்கான செயல்பாட்டுக் கையேட்டின் வரைவு தயாரிக்கப்பட்டிருந்ததாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறான நிதி பரிமாற்றங்களின் போது ஏற்படும் சைபர் அச்சுறுத்தல்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அதிகாரி, "தற்போது இதற்கான காப்பீடுகள் எதுவும் செய்யப்படவில்லை. காப்பீட்டுக்கான பிரீமியம் தொகை மிக அதிகமாக காணப்படுவதனால், அவசர தேவைகளின் போது வரவு-செலவுத் திட்டம் ஊடாக நிதியை ஒதுக்குவதே சிறந்தது என நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது" எனக் குறிப்பிட்டார்.

பணமோசடி தடுப்பு மற்றும் சைபர் குற்றங்களுக்கு எதிரான இலங்கையின் செயல்திறன் அறிக்கை ஜுன் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இது தொடர்பான சர்வதேச குழுவின் நேரடி விஜயம் அமையவுள்ளதுடன், அடுத்த ஆண்டு ஜுலை மாதமே இறுதி அறிக்கை வெளியாகும்.

இது குறித்து மேலும் விளக்கிய அதிகாரி, இலங்கை தற்போது எந்தவொரு கறுப்புப் பட்டியலிலோ அல்லது சாம்பல் பட்டியலிலோ இல்லை எனத் தெளிவுபடுத்தினார். கடந்த 2011 முதல் 2013 வரையிலும், பின்னர் 2017 ஆம் ஆண்டிலும் இலங்கை சாம்பல் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டளவில் அதிலிருந்து வெற்றிகரமாக வெளியேறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சம்பவம் ஒரு குறிப்பிட்ட முன்மாதிரி வழக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, சர்வதேச அமைப்புகளுடனான கூட்டு ஒத்துழைப்பு பலப்படுத்தப்படும் என அதிகாரிகள் குழுவிடம் உறுதியளித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவசாயிகளை பாதுகாக்கத் தவறினால் ஒட்டுமொத்த தேசத்தின் அழிவு ஆரம்பம்!

## எல்லே குணவன்ஸ தேரர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 17

விவசாய சமூகத்தை பாதுகாக்கத் தவறினால், எமது ஒட்டுமொத்த தேசத்தினதும் அழிவு ஆரம்பமாகும் என எல்லே குணவங்ச தேரர் எச்சரித்துள்ளார்.

விவசாய அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் உள்ள தர்மாயதனத்துக்குச் சென்று, தேரரைச் சந்தித்து கலந்துரையாடினர்.


தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விவசாயிகள் எதிர்நோக்கி வருகின்ற வாழ்வாதாரப் பிரச்னைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தற்கால அமைச்சர்கள் "விவசாயி அரச பதவிக்கு தகுதியானவர்" என்ற கூற்றுக்குக் கொடுக்கும் விளக்கங்களைப் பார்க்கும் போது, இவர்கள் எமது நாட்டின் வரலாற்றைக் கூட படித்ததில்லை என்பது புரிகின்றது. அன்று எமது வரலாற்றில் விவசாயி அரச பதவிக்கு தகுதியானவன் என்று போற்றப்பட்டதற்குக் காரணம், அவன் பஞ்சசீலக் கொள்கைகளைப் பின்பற்றி, அறநெறி வழுவாமல் வாழ்ந்தமையாகும். அந்த உன்னதமான கலாசாரத்தின் பின்னணியில்தான் விவசாயி அரச பதவிக்கு தகுதியானவனாக உயர்ந்தான்.

நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாய சமூகத்தை நாம் பாதுகாக்கத் தவறினால், எமது தேசத்தினது அழிவு அந்த இடத்திலிருந்தே ஆரம்பமாகும். இன்று எமது நெற்பயிர்கள் அனைத்தும் அழிவடைந்து போகின்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இன்று நாட்டின் ஜனாதிபதியும் ஒரு விவசாயியின் மகனாகவே இருக்கின்றார். ராஜபக்ஷக்களும் தாங்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், விவசாயிகளின் வயல் வரம்புகளில் கைகளைக் கழுவியவர்கள் என்றும்தானே கூறிக்கொள்கிறார்கள்? அப்படியாயின், வெறும் வார்த்தைகளோடு நின்றுவிடாமல், அந்த விவசாயப் பின்னணியை உணர்ந்து உரிய நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். விவசாய சமூகத்துக்கு மேலும் கண்ணீர் சிந்துவதற்கு இடமளிக்காமல், அவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்- என்றார். (அ)



# சிறைச்சாலைகளில் உள்ள பெண்களுக்கு விசேட நீதிமன்றக் கட்டமைப்பு அவசியம்!

## சுதந்திர கட்சியின் மகளிர் முன்னணி வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 17

நாட்டில் உள்ள 18 முதல் 35 வயது வரை உள்ள பெண்களில் 3 வீதமானோர் இன்று பல்வேறு பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளால் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பின்னணியை ஆராய்ந்து விசேட நீதிமன்றக் கட்டமைப்பொன்றை உருவாக்கி, சட்ட ரீதியான தீர்வுகளை விரைந்து காண வேண்டும் என்று சுதந்திர கட்சியின் மகளிர் முன்னணியின் தலைவர் குமாரி பதிரகே தெரிவித்தார்.

கொழும்பில் சுதந்திர கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டின் மொத்தச் சனத்தொகையில் பெரும் பங்களிப்பை வழங்கும் பெண்களில் 3 வீதமானோர் இன்று பல்வேறு பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளால் சிறைப்படுத்தப்பட்டுள்ள அவல நிலை தோன்றியுள்ளது. குறிப்பாக, 18 முதல் 35 வயதுக் குட்பட்ட இளம் பெண்கள் நாட்டின் தற்போதைய வாழ்வாதார நெருக்கடி மற்றும் குடும்பத்தைப் பராமரிப்பதற்கு வழியின்மை போன்ற காரணிகளால், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுக்குள் தள்ளப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். எனவே, இவ்வாறு கைதிகளாக மாறியுள்ள பெண்களின் பின்னணிகளை ஆராய்ந்து அவர்களுக்காக விசேட நீதிமன்றக் கட்டமைப்பொன்றை உருவாக்கி, சட்ட ரீதியான தீர்வுகளை விரைந்து காண வேண்டும் என மகளிர் விவகார அமைச்சரிடம் அவசரக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அமைச்சர் நாட்டின் சிறைச்சாலைகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அங்குள்ள பெண்களின் நிலைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து சரியான வாழ்வாதாரத் தீர்வுகளைப் பெற்றுத் தர வேண்டும்- என்றார். (அ)

# போதைப்பொருள் விற்பனை ஜோடி ஊழல் ஒழிப்புப் பிரிவிடம் சிக்கியது!

அம்பாறை, ஜூலை. 17

அம்பாறை பிரிவு ஊழல் ஒழிப்பு பிரிவினரால் தமன, முவங்கல, பாடசாலை ஒன்றின் அருகே மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், போதைப்பொருளை விற்பனைக்கு எடுத்துச் சென்றதாக சந்தேகிக்கப்படும் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீண்டகாலமாக போதைப்பொருள் கடத்தல் மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டு வந்ததாகவும், இவர்களைப் பற்றி கிராம மக்கள் பலமுறை தமன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து தமன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் மனோஜ் அலஹப்பெரும தலைமையில் பலமுறை சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சந்தேகநபர்களை கைது செய்ய முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அம்பாறை பிரிவு ஊழல் ஒழிப்பு பிரிவிற்கும் இவர்களைப் பற்றிய தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்து, முன்னெச்சரிக்கையுடன் திட்டமிடப்பட்ட நடவடிக்கையின் மூலம் நேற்று முன் தினம் நண்பகல் குறித்த தம்பதியினர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டபோது ஆண் சந்தேகநபரிடமிருந்து 5,120 மில்லிகிராம் ஹெரோயின், பெண் சந்தேகநபரிடமிருந்து 2,500 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், போதைப்பொருள் விற்பனையின் மூலம் சம்பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 21,510 ரூபாய் பணமும், போதைப்பொருள் விநியோகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட தம்பதியினர் 37 மற்றும் 34 வயதுடையவர்கள் என்றும், முவங்கல கிராமம் 8 பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)


# மோட்டார் சைக்கிளில் சாகசம் இளைஞர் குழு அதிரடிக் கைது!

அம்பாறை, ஜூலை. 17

அம்பாறை சம்மாந்துறைப் பகுதியில் பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் பெரும் இடையூறு விளைவிக்கும் வகையில், மோட்டார் சைக்கிள்களில் ஆபத்தான முறையில் பயணித்த இளைஞர் குழுவொன்றைச் சம்மாந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமூக வலைத்தளங்களில் அண்மையில் வைரலாகி, பொது மக்கள் மத்தியில் பலத்த கண்டனங்களையும் அதிர்வலையையும் ஏற்படுத்தியிருந்த காணொளி ஒன்றினை அடிப்படையாகக் கொண்டே சம்மாந்துறைப் பொலிஸாரால் இந்த விசேட அதிரடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் ஓட்டியமை, ஒரே மோட்டார் சைக்கிளில் 3 முதல் 4 பேர் வரை பயணித்தமை, பிரதான வீதியை மறித்து ஆபத்தான முறையில் சாகசம் செய்தமை உள்ளிட்ட விதிமீறல் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது இடம்பெற்றுள்ளது. (அ)

# இராணுவத்தின் உதவியுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை



அம்பாறை, ஜூலை. 17

நாட்டில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் மிகத் தீவிரமாக அதிகரித்து வருவதுடன், உயிரிழப்புகளும் பதிவாகி வரும் நிலையைக் கருத்திற்கொண்டு, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் பகுதியில் விசேட நுளம்பு களத்தடுப்பு மற்றும் வீட்டுப் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியின் நேரடித் தலைமையில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்கள் மற்றும் இலங்கை இராணுவத்தினர் இணைந்து இந்தத் தீவிர கூட்டுத் தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த கள நடவடிக்கையின் போது, வொலிவேரியன் பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வெற்று நிலங்கள் அனைத்தும் அதிகாரிகளினால் அணு அணுவாகப் பரிசோதிக்கப்பட்டன. இதன் போது, டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் நீர் தேங்கியிருந்த இடங்கள் மற்றும் டெங்கு பரவலுக்கு வழிவகுக்கும் அபாயகரமான சூழல்கள் பல அடையாளம் காணப்பட்டன.

அடையாளம் காணப்பட்ட நுளம்புப் பெருக்க இடங்கள் அனைத்தும் வீட்டுரிமையாளர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் உடனடியாக அகற்றப்பட்டு, சுற்றுப்புறச் சூழல் துப்புரவு செய்யப்பட்டது. (அ)

# பஸ்-மோ.சைக்கிள் மோதி மருதமுனையில் விபத்து!

## ஒருவர் உயிரிழப்பு

அம்பாறை, ஜூலை. 17

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதான வீதியில், பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கதிர்காமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரச பஸ் ஒன்று, மோட்டார் சைக்கிளுடன் மோதியதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் ஜெயராமன் ஜெகதீஸ்வரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் பணியாற்றி வந்தார். கல்லடி இசை நடனக் கல்லூரி வீதியைச் சேர்ந்த இவர், தற்போது பாண்டியிருப்பில் வசித்து வந்ததாகவும் ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்கான காரணம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிளிநொச்சி ஒருங்கிணைப்பு...

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வாக்குவாதம் தீவிரமடைந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் இந்த விடயத்தில் உடந்தையாக செயற்படுவதாக அர்ச்சுனா எம்.பி. குற்றஞ்சாட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இடம்பெற்ற கருத்து மோதலையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

தொடர்ந்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தவிசாளர்களுக்கு இடையிலும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறியதுடன், பின்னர் அரச திணைக்கள அதிகாரிகளும் ஒன்றன்பின் ஒன்றாக வெளியேறினர்.

இதன் காரணமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடந்து அர்ச்சுனா பொலிஸாரால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னதாக, கூட்டம் வழமையான முறையில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மத்திய மற்றும் மாகாண அரசாங்க அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், க.இளங்குமரன், இராமநாதன் அர்ச்சுனா உள்ளிட்டோர், பொலிஸார், கடற்படையினர், இராணுவத்தினர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பல்வேறு துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (அ)

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில்...

எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதற்கு இன்றைய சம்பவமே மற்றுமொரு சான்றாகும் எனவும் அமைச்சர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் நேற்று வியாழக்கிழமை ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் மிகவும் அமைதியான முறையிலேயே நடைபெற்று வந்தது.

இந்நிலையில், சிவபூசையில் கரடி புகுந்தது போல, ஒரு கரடி புகுந்து பைத்தியக்காரத்தனமாக விளையாடி, குழப்பத்தை விளைவித்துக் கூட்டத்தை இடைநிறுத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்ச்சியாக எல்லாக் கூட்டங்களுக்கும் சென்று குழப்பம் விளைவித்து வருகின்றார். அதிகாரிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தி வருகின்றார்.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தைப் பயன்படுத்தி அதிகாரிகள் மீது அபாண்டமாகப் பழி சுமத்தக்கூடாது. அவ்வாறு செய்தால், அந்த அதிகாரிகளால் சமூகத்தின் முன் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

அர்ச்சுனாவின் இத்தகைய கேடு கெட்ட நடவடிக்கைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு இன்றைய கூட்டமே சாட்சியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இருப்புத் தொடர்பில் நாம் அவதானம் செலுத்துவோம். அடுத்து வரும் நாள்களில் மீண்டும் அபிவிருத்திக் குழு கூடும் அப்போது உறுதியான முடிவு எடுக்கப்படும்-என்றார். (அ)

## பாட அடிப்படையில்...

மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபயரத்ன தெரிவித்துள்ளார்.

ஆணமடுவ, கருக்குமடு கனிஷ்ட வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரியர் நியமனங்கள் எதுவும் இடம்பெறவில்லை. இந்த ஆண்டு 30,000 ஆசிரியர்களை நியமிப்பதற்கான நிதி ஒதுக்கீடும் அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்கு பட்டதாரிகள் உட்பட சுமார் 180,000 தகுதியான விண்ணப்பதாரர்கள் தோற்றியிருந்தனர். விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இறுதிக்கட்டத்தில் இருக்கின்றன. குறிப்பாக கணிதம் உள்ளிட்ட ஆசிரியர் பற்றாக்குறை அதிகமுள்ள பாடங்களுக்கு, அந்தந்த பாடங்களில் தகுதி பெற்றவர்களையே நியமிப்பது புதிய முறையின் சிறப்பம்சமாக இருக்கும்.

அத்துடன், அதிபர் சேவையில் நிலவும் பிரச்னைகளுக்கும் விரைவில் தீர்வு காண அமைச்சரவை மட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், 2025 ஜனவரி முதல் 35 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட்டதோடு, 2026 ஜனவரியில் மேலும் 35 சதவீதமும், 2027ஆம் ஆண்டில் எஞ்சிய 30 சதவீத உயர்வும் வழங்கப்படும். மேலும், அரச ஊழியர்களுக்கான வீடு மற்றும் காணி வாங்கும் சொத்துக் கடன் உச்சவரம்பு 30 இலட்சம் ரூபாவிலிருந்து 50 இலட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

## குறைந்த விலையில்...

மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் ஏற்படக்கூடிய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சவால்களை எதிர்கொள்வதில், கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்கம் மிகவும் அவதானமாகச் செயல்பட்டு வருகிறது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை சீராகி வரும் போதிலும், ஏதேனும் ஒரு துறையை முடக்கிவிட்டு எம்மால் முன்னோக்கி நகர முடியாது.

அவ்வாறு முடக்கினால் அதனை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரப் பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். எனவே, எரிபொருள், மின்சாரம் மற்றும் உரம் ஆகிய அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றித் தொடர்ந்து வழங்குவதே அரசாங்கத்தின் முதன்மை இலக்காகும். தற்போது டீசல் நுகர்வு 11 வீதத்தாலும், பெற்றோல் நுகர்வு 9 வீதத்தாலும் குறைந்துள்ள போதிலும், மத்திய கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருள் ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டியுள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் மசகு எண்ணெய் விலையின் ஏற்ற இறக்கங்களுக்கு அமைவாகவே உள்நாட்டு எரிபொருள் விலைகள் தீர்மானிக்கப்படும். சர்வதேச ரீதியில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கைகள் குறித்துப் பேசப்பட்டாலும், எண்ணெய் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. இதனால், நாட்டில் எவ்விதத் தடையுமின்றித் தொடர்ந்து எரிபொருளை விநியோகிப்பதை உறுதிப்படுத்த நாம் முயற்சிப்பதால், உலகச் சந்தையில் நிலவும் மிகக் குறைந்த விலைக்கு எம்மால் எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியாமல் போகலாம் - என்றார். (அ)

## சீர்திருத்தங்களை...

அறிக்கையின் விவரம் வருமாறு:-

நீர்கொழும்பு சிறைச்சாலை வன்முறையில் 29 பேர் (ஏழு சிறை அதிகாரிகள் உட்பட) உயிரிழந்ததுடன், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்த துயரச் சம்பவம் அரசாங்கத்திற்கு விழித்தெழுவதற்கான அழைப்பாகும். இந்த பேரழிவு அலட்சியம், அரசியல் தோல்வி மற்றும் சமூக உதாசீனம் ஆகியவற்றினால் விளைந்த ஒன்றாகும்.

இத்தகைய பேரழிவுக்கான சூழ்நிலைகள் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கீழ் பல தசாப்தங்களாகத் திரண்டிருந்த போதிலும், தற்போதைய அரசாங்கம் ஆபத்தை முன்கூட்டியே கணிக்கவும் வன்முறை வெடித்தவுடன் விரைவாகவும் திறமையாகவும் பதிலளிக்கவும், தனது பாதுகாப்பில் உள்ளவர்களின் உயிர்களைப் பாதுகாக்கவும் கடமைப்பட்டிருந்தது.

சிறைக்குள் ஏராளமான ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டமை குறித்து தனியாக விசாரணை நடத்தப்பட வேண்டும். ஏனெனில் இது வன்முறையையும் குழப்பத்தையும் உருவாக்குவதற்காக திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு செயலையே உணர்த்துகிறது. பொறுப்பில் இருந்தவர்களால் இந்த கடமை நிறைவேற்றப்படவில்லை, அதாவது உயிரைப் பாதுகாக்கும் தனது மிக அடிப்படையான கடமையில் அரசு தவறியுள்ளது.

இலங்கையின் சிறைச்சாலைகளில் நெரிசல், போதிய உள்கட்டமைப்பு வசதியின்மை, ஊழியர் பற்றாக்குறை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலைப்பின்னல்களின் செல்வாக்கு ஆகியவை நீண்டகாலமாக அடையாளம் காணப்பட்ட போதிலும், இந்த பிரச்சினைகளை கையாள்வதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் அவசியமாகும்.

சிறைச்சாலைகளின் கொள்ளளவு சுமார் 10,000 கைதிகளுக்கு மட்டுமே உள்ள நிலையில், சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 28,000 ஆக இருந்து இன்று 42,000 க்கும் அதிகமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் பிணை பெறுவதை மிகவும் கடினமாக்கும் வகையில், அதன் தாக்கங்களை ஆராயாமல் அரசாங்கம் சட்டத்தில் கொண்டு வந்த மாற்றம் இந்த சூழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலை மாத்திரம் சுமார் 650 கைதிகளுக்காக கட்டப்பட்ட ஒரு வசதியில் சுமார் 2,600 கைதிகளைக் கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலைகள் அவசரத் தடுப்பு நடவடிக்கைகளை அத்தியாவசியமாக்கின.

நெரிசலைக் குறைத்தல், புனர்வாழ்வை வலுப்படுத்துதல் மற்றும் சிறைச்சாலைகளை குற்றவாளிகள் மீண்டும் சமூகத்துடன் இணைவதற்கேற்ற நிறுவனங்களாக மாற்றுவது உட்பட அரசாங்கத்தின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியளிக்கப்பட்ட சிறைச்சாலை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை நீர்கொழும்பு சிறைச்சாலைத் துயரம் நிரூபிக்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த அமைப்பை மாற்றுவதற்கான ஆணையுடனேயே ஆட்சிக்கு வந்தது. மசூ பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைத்தமை, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் ஊழல்களுடனான தொடர்புகளை கொண்டிருந்தமை என்று முன்னைய அரசாங்கங்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டதைப் போன்ற குற்றங்கள் அற்றதாக இருப்பது அற்ற ஒன்றாக இந்த அரசாங்கம் பரவலாகப் பார்க்கப்படுகிறது.இது இதன் மிகப்பெரிய பலங்களில் ஒன்றாகும்.

மற்றவர்களால் நம்பகத்தன்மையுடன் தொடர முடியாத சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை இது அரசாங்கத்திற்கு வழங்குகிறது. ஆனால் நேர்மை மட்டும் போதாது. அது நிர்வாகத் திறமை மற்றும் நீண்டகாலமாக வாக்குறுதியளிக்கப்பட்ட சீர்திருத்தங்களைச் செயல்படுத்துவதற்கான அரசியல் விருப்பத்துடன் பொருந்துவதாக இருக்க வேண்டும்.

அரசாங்கத்தால் ஒரு உயர் மட்ட அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது என்றாலும், அதன் கண்டுபிடிப்புகள் தீவிரமான, கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு வழிவகுக்க வேண்டும். சிறைக்கைதிகள் மற்றும் சிறைக்காவலர்கள் இருவருமே சிறை அமைப்பிற்குள் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருப்பதால், நீதிக்காக அவசரமானதும் நன்கு வரையறுக்கப்பட்டதுமான நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

நீர்கொழும்பு சிறைச்சாலைத் துயரத்தை ஒரு திருப்புமுனையாகக் கருதுமாறு தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது. அர்த்தமுள்ள சிறைச்சாலைச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத் தோல்விகளுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட பரந்த சீர்திருத்தத் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கும் அரசாங்கம் அவசரமாகச் செயல்பட வேண்டும்-என்றுள்ளது. (அ)

## அமெரிக்காவிடமிருந்து...

முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்டாய உழைப்பைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் இறக்குமதிக்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் தடை விதித்துள்ளதால், அமெரிக்காவிடம் இருந்து வரும் காலத்தில் மேலதிக வரிச் சலுகைகளை எதிர்பார்க்க முடியும் எனத் தூதுவர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆடைகளுக்கு அமெரிக்கா விதிக்கத் திட்டமிட்டிருந்த 12.5 வீத மேலதிக வரி, அரசாங்கத்தின் புதிய வர்த்தமானி அறிவித்தல் காரணமாகச் சாதகமாக மாற்றியமைக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

வியட்நாம், பங்களாதேஷ் போன்ற போட்டி நாடுகளுக்கு 10 வீத வரி விதிக்கப்பட்டுள்ள பின்னணியில், இலங்கையின் ஆடைத் தொழில்துறையைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த அதிரடி வர்த்தமானி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் கட்டாய உழைப்பால் தயாரிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைச் சுங்கப் பணிப்பாளரிடம் சமர்ப்பிப்பது புதிய சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## எங்களின் காலம்...

-இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இளைஞர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:

"ஜென்-சி (புநெ ஹு) தலைமுறை பற்றி உங்களுக்குத் தான் தெரியுமே தவிர, எனக்குத் தெரியாது. ஏனெனில், எங்களது காலத்தில் எங்களுடைய கருத்துகளை எமது பெற்றோர் அறிந்து வைத்திருக்கவில்லை.

புதிய உலகை நோக்கிச் செல்ல வேண்டுமானால், அங்கு வாழும் விதம் குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

ஜே.ஆர். ஜெயவர்தன அவர்களின் காலத்தில் இளைஞர்களாக இருந்த எங்களுக்குச் சுதந்திரமாக எமது சிந்தனைக்கேற்பச் செயல்பட இடமளிக்கப்பட்டது. நாமும் அதன் மூலம் முன்னேறினோம். எனவே, தற்போதைய நவீன உலகிற்குத் தலைமையேற்க இளைஞர்கள் துணிச்சலுடன் முன்வரவேண்டும்," என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (அ)

## ஐ.தேக. - ஐ.ம.ச...

எமது தலைவர் (ரணில் விக்கிரமசிங்க) மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே பேசியுள்ளார்கள்.

எனவே, நாம் அடுத்த கட்டத்திற்கு நகர முடியும் என்று நான் நினைக்கிறேன். உண்மையில் மக்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரும் பிரார்த்தனை செய்வதும் அதையேதான்" எனத் தெரிவித்தார். (அ)

## நாட்டு மக்கள்...

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

"அந்தக் கூட்டத்தினர் தங்களது வீடுகளில் ஒன்று கூடினாலும், கிராமங்களில் உள்ள மக்கள் அந்தப் கட்சிகளுடன் இணைந்து, கட்சிகள் போகும் பக்கமெல்லாம் போவதில்லை. எமது நாட்டு மக்கள் அரசாங்கத்துடன் தான் இருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் சில வேலைகள் குறித்து விமர்சனங்கள் உள்ளன, அரசாங்கத்தின் சில வேலைகள் குறித்து மக்களிடம் கவலையும் இருக்கிறது.

ஆனால், குறிப்பிட்ட சில பணிகளுக்குப் பிறகு மீண்டும் அவர்களே அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்து தங்களது நன்மதிப்பை வெளிப்படுத்துவார்கள்" என அமைச்சர் சுசில் ரணசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## செம்மணி புதைகுழியில்...

அவற்றில் 416 என்புக்கூட்டுத் தொகுதிகள் துப்புரவாக்கப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் கட்டுக் காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 130 பிறசான்றுப் பொருள்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# உண்மையான விவசாயிகள் இப்போது மிகுந்த மகிழ்ச்சி!

## அமைச்சர் வசந்த சமரசிங்க



கொழும்பு, ஜூலை. 17

அரசாங்கம் நெல்லுக்கான நியாயமான மற்றும் உத்தரவாதமான விலையை வழங்கி, அதனை கொள்வனவு செய்யும் முறையான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளமையால், நாட்டின் விவசாயிகள் தற்போது மிகுந்த மகிழ்ச்சியில் இருப்பதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு உறுப்பினர் டிஜிற்றல் நுழைவாயிலை அறிமுகம் செய்யும் நிகழ்வில் நேற்று (14) கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை கூறினார்.

நெல் கொள்வனவை முறையான திட்டமிடலுடன் மேற்கொள்வதற்காக அரசாங்கம் அதிக நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

"2025ஆம் ஆண்டை விட 2026 ஆம் ஆண்டுக்காக 10,000 மில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கியுள்ளோம். அறுவடை கூட இன்னும் முழுமையாக ஆரம்பிக்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில், விவசாயிகள் அதிருப்தியில் இருப்பதாக யாராவது கூறினால், அவர்கள் விவசாயிகளாகக் காட்டிக்கொள்ளும் வேறு யாரோ ஒரு வராகத்தான் இருக்க வேண்டும்.

ஆனால், உண்மையான விவசாயிகள் இப்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளனர்." என்றார்.

அரசாங்கம் நெல் கொள்வனவுச் செயற்பாட்டில் நேரடியாகத் தலையிட்டதன் காரணமாக, தனியார் துறையினரும் நெல் கொள்வனவு விலையை அதிகரிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த சில நாட்களில் தனியார் துறையினரும் நெல் கொள்வனவு விலையை 112 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும், இதன் மூலம் விவசாயிகள் தமது விளைச்சலுக்கு அதிகப்படியான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும் அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# அரச பணியாளர்கள் ஓய்வு வயதை 65 ஆக உயர்த்த அரசு பரிசீலனை!

கொழும்பு, ஜூலை. 17

அனைத்து அரச பணியாளர்களினதும் ஓய்வுபெறும் வயதை 65 ஆக உயர்த்துவதற்கான ஒரு திட்டத்தை அரசாங்கம் பரிசீலித்து வருவதாக அரச உயர்மட்ட வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

தற்போதைய சட்டத்தின்படி, ஒரு பொது அரச பணியாளரின் ஓய்வுபெறும் வயது 60 ஆகும். இருப்பினும், பல விசேட தொழில்களில் அறுபது வயதுக்கு மேற்பட்ட பல் வேறு வயதுப் பிரிவுகள் ஓய்வு பெறும் வயதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு 61 வயது, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்கு 63 வயது, உயர் நீதிமன்ற நீதியரசர்களுக்கு 65 வயது மற்றும் விசேட மருத்துவ நிபுணர்களுக்கு 63 வயது என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனுடன், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதும் மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கப்பட்டு 67 வயதாக உயர்த்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை உயர்த்துவது தொடர்பான இந்தத் திட்டம், சமீப நாள்களாகத் தீவிர சமூக விவாதத்துக்குள்ளாகி வருவதைத் தொடர்ந்து, பல தொழில் முறை சங்கங்கள் தங்கள் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை உயர்த்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன.

இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு, சில பொது நிறுவனங்கள் மற்றும் சபைகளின் ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு வழங்கப்படும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் தொழிலாளர் நம்பிக்கை நிதியை மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க ஒரு வாய்ப்பை வழங்குவதே அனைத்து அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க அரசு முடிவெடுக்கத் தூண்டிய மற்றொரு காரணமாகும்.

இது அரசாங்கத்துக்கு அதன் பொது நிதி இருப்புகளை வலுப்படுத்த ஒரு வாய்ப்பையும் வழங்கும். இது சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்த உதவும் ஒரு சூழ்நிலையாகும். எனவே, அனைத்து அரச பணியாளர்களின் ஓய்வு பெறும் வயது அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது என்று அரச தரப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

# கட்டுமான நிபுணர்களின் தேவை நாட்டில் அதிகரிப்பு

## பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை. 17

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் துரித அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக, கட்டுமானத்துறையில் தொழில் நிபுணர்களுக்கான தேவை அதிகரித்துள்ளதாக பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார்.

நிலவும் கடும் தொழில் நிபுணர்களுக்கான தட்டுப்பாடு காரணமாக, எதிர்வரும் ஆண்டில் கட்டுமானத்துறையில் 10,000 இற்கும் மேற்பட்ட தொழில் நிபுணர்களை வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் இறுதியிலும் அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ள பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டங்களுக்காக, வெல்டிங் நிபுணர்கள் மற்றும் மின்னியலாளர்கள் போன்ற திறமையான பணியாளர்களைக் கண்டறிவது தற்போது சவாலாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற பிராந்திய நாடுகளைக் காட்டிலும், தெற்காசியாவில் மிக வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இலங்கை மாறியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் டி.பி. சரத் தெரிவித்துள்ளார். (அ)

# தாதியர்களின் ஓய்வு வயது வரம்பை இரு வருடங்களால் நீடிக்கவேண்டும்!

## அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் ஜனாதிபதி அநுரவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 17

நாட்டில் நிலவும் கடுமையான தாதியர் வெற்றிடத்துக்கு தீர்வு காணும் வகையில், ஓய்வு பெறவுள்ள தாதியர்களின் பணிக்காலத்தை இரண்டு வருடங்களால் நீடிக்குமாறு அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதத்தை சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 50,000 ஐத் தாண்டியுள்ளது. வீடுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளைக் கணக்கிட்டால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கக்கூடும் என்று அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், அவர்களைப் பராமரிக்கத் தேவையான தாதியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் புதிய தாதியர்களை ஆட்சேர்ப்பதற்குத் தயாராக இருந்தாலும், அவர்களுக்குப் பயிற்சி அளித்து சேவையில் இணைப்பதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் தேவைப்படும்.

தற்போதைய நிலையில் நிலவும் தாதியர் பற்றாக்குறையினால், ஒரு தாதியர் மூன்று பேரின் பணிச்சுமையைச் சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கடுமையான பணிச்சுமை காரணமாக தாதியர்களும் நோய்வாய்ப்படும் அபாயம் உள்ளதாகவும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நெருக்கடியான சூழலைத் தணிப்பதற்காக, ஓய்வு பெறவுள்ள தாதியர்களின் வயது வரம்பை இரண்டு வருடங்களால் நீடிப்பதற்கு ஜனாதிபதி தனது நேரடி மற்றும் விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும் என அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தனது கடிதத்தில் கோரியுள்ளது. (அ)

# சிகரெட் வரி குறைப்பால் அரசுக்கு 25 பில்லியன் ரூபா வருமான இழப்பு

## வெரிட்டே ரிசேர்ச் தகவல்

கொழும்பு, ஜூலை. 17

உலக சுகாதார நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மட்டத்தை விட இலங்கையில் சிகரெட்டுகளுக்கான வரி குறைவாக இருப்பதன் காரணமாக, 2025 ஆம் ஆண்டு முதல் இதுவரை அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய 25 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள வருமான இழப்பு 8 பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என அந்த கொள்கை பகுப்பாய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிகரெட் வரி அறவீடு மூலம் ஏற்படும் நிதி இழப்புகளைக் கண்காணிப்பதற்காக, வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட இணைய வழி கண்காணிப்புத் தளத்தை அறிமுகப்படுத்திய போதே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளின்படி, புகையிலை நுகர்வை வெற்றிகரமாகக் குறைப்பதற்கும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், ஒரு சிகரெட்டின் சில்லறை விலையில் குறைந்தபட்சம் 75 வீதம் வரியாக அறவிடப்பட வேண்டும்.

இலங்கை 2018 ஆம் ஆண்டில் இந்த மட்டத்துக்கு நெருக்கமாக வந்திருந்தது. அப்போது சில்லறை விலையில் 74 வீதம் வரியாக அறவிடப்பட்டது. இருப்பினும், அண்மைக்காலமாக அந்த வரி வீதம் குறைவடைந்துள்ளதாகவும், 2025 ஆம் ஆண்டு முதல் அது 67 வீதம் என்ற மட்டத்திலேயே காணப்படுவதாகவும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலைமையே பாரிய வருமான இழப்புக்கு வழிவகுத்துள்ளதாகத் தெரிவிக்கும் வெரிட்டே ரிசேர்ச், கொள்கை வகுப்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் சிகரெட் வரி கொள்கைகளின் நிதித் தாக்கத்தை நேரலையில் கண்காணிப்பதற்கான வெளிப்படையான கருவியாக இந்தத் தளம் அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக 2026 முதல் பாதியில் 4.75 மில். பேர் பயணம்!

கொழும்பு, ஜூலை. 17

இலங்கையின் விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டுகின்ற வகையில், 2026-ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மட்டும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் சுமார் 4.75 மில்லியன் பயணிகளைக் கையாண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

2026 ஜனவரி முதல் ஜூன் வரை 4,748,481 பயணிகளும், 30,659 விமானங்களும் கையாளப்பட்டுள்ளன.

மேலும் விமான நிலையம் வழியாக 1,146,573 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் நிறுவனம் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த 2025-ஆம் ஆண்டு முழுவதிலும் 10.21 மில்லியன் பயணிகள், 95,629 விமானங்கள் மற்றும் 946,811 பரிமாற்றப் பயணிகள் கையாளப்பட்டனர்.

மக்களையும் கலாசாரங்களையும் இணைப்பதிலும், நாட்டின் சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளை வலுப்படுத்துவதிலும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருவதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org